

திருவாரூரில் அனைத்து ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய போலியோ விழிப்புணர்வு பேரணியை பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ துவக்கி வைத்தனர் . நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவன ப்ரியா செந்தில்,துணை தலைவர் அகிலா சந்திரசேகர், நகர பொருளாளர் ரொட்டேரியன் ராஜினி சின்னா, கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ரொட்டேரியன் ராஜ்,பொதுக்குழு உறுப்பினர் ரொட்டேரியன் கே.எஸ்.எஸ்.தியாகபாரி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.



கோவை கருமத்தம்பட்டி SNK திருமண மண்டபத்தில் நடைபெற்ற தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் தமிழ்நாடு மினசாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில், கிணத்துக்கடவு தொகுதி மதுக்கரை ஒன்றியம், பாஜகவை சேர்ந்த மாவுத்தம்பதி ஊராட்சி செயலாளர் சண்முகசுந்தரம், மதுக்கரை ஒன்றிய பாஜக இளைஞரணி செயலாளர் சி.மோகன்குமார், சுரேஷ்குமார், தினேஷ், .மதன், .மணிகண்டன் மற்றும் எட்டிமடை பேரூராட்சி அ.தி.மு.க. 8வது வார்டு உறுப்பினர் பாலசண்முகம் உள்ளிட்ட 100 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஏற்பாட்டில் நடைபெற்ற இணைப்பு விழாவில் தொகுதி பொறுப்பாளர்கள் சிந்து ரவிச்சந்திரன், ரத்தினசாமி, பி.எ.சேகர், அருள்மொழி அவைத்தலைவர் மயூரா சுப்ரமணியம் மாவட்ட துணை செயலாளர்கள் சாமிநாதன் கனிமொழி, பொன்னுசாமி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்தர் இருகூர் சந்திரன் கோழிக்கடை கணேசன், அமுதபாரதி மாநில தகவல் தொழில்நுட்ப இணைச்செயலாளர் டாக்டர் மகேந்திரன் முன்னாள் மத்திய அமைச்சர் மு.கண்ணப்பன் நெசவாளர் அணி நாகராஜ், பனப்பட்டி தினகரன் ,தென்றல்செல்வராஜ் மருதமலை சேனாதிபதி கழக பிரச்சாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி, அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

# சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்

## என்.கௌதமன் சிறப்புரை! உ.மதிவாணன், இரா.சங்கர், ஜெயபிரகாஷ் பங்கேற்பு!

நாகை, அக். 28-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், க.மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்களை அறிமுகம் செய்து வைத்தும், கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளர், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் திருவாரூர் இரா.சங்கர், வேதாரண்யம் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜெயபிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என். சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எம். பாண்டியன், எஸ்.பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, கோசி.குமார், எஸ். பி.டி.சார்லஸ், எல். எஸ்.ஈ.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் க.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா. முருகையன் அ.பாரிபாலன், க.சத்தியமூர்த்தி, ஆர்.துரைராஜ், இளம்சுந்தர், பால. முரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, இளம்.சுந்தர், ப.உதயக்குமார், ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.சந்தோஷ், ஆர்.சுரேந்தர், வ. கமல், எஸ்.பாலமுரளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.தாமோதரன், தி.கலையரசன், ஜெ.ஆர்.கே.சுரேஷ், கு.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள். 2026 சட்ட மன்ற தேர்தலில் நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் ஆகிய மூன்று சட்ட மன்ற தொகுதிகளிலும், கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான ஆட்சி மீண்டும் ஆட்சி அமைத்திட, தளபதி அவர்களின் கரத்தை வலுப்படுத்திடும் வகையில் தேர்தல் பணியினை கழக நிர்வாகிகள், கழகத்தினர் உடன் தொடங்கிட வேண்டும் என்றும், தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் சரிபார்க்க சிறப்பு முகாம் குறித்து அறிவிப்பு வெளியிடப்படும் நாற்களில் கழக வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கழகத்தினர் மற்றும் கழக ஆதரவாளர்கள் பெயர்களை புதிய வாக்காளர்களாக சேர்த்திட வேண்டும் என்றும், மறைந்த, ஊரில் இல்லாத வாக்காளர்களை நீக்கிட வேண்டும் என்று ஒன்றிய, நகர, பேரூர் செயலளார்கள் தங்கள் பகுதியில் உள்ள கிளை, வார்டு கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 வினர் அனைவருக்கும் தகவல் தெரிவித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

ஒற்றை செங்கல்லால் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் அவலங்களை தோலுரித்து காட்டிய, தமிழ்நாடு முழுவதும் சுற்று பயணம் செய்து கழக நிகழ்ச்சிகள், கழகத்தினர் இல்ல நிகழ்ச்சி, தேர்தல் நேரத்தில் தமிழகம் முழுவதும் கழக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு, மக்கள் நலனுக்கான போராட்டங்கள் என கழகத்திற்காக உழைத்து, உழைப்பால் உயர்ந்த கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான வரும் நவம்பர் 27ம் தேதி அன்று நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகளில் உள்ள கழக கொடி கம்பங்களை சீரமைத்தும், புதிய கொடி கம்பங்களை அமைத்தும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கிட வேண்டும் என்றும், மேலும் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொடர் நிகழ்ச்சிகளாக மருத்துவ முகாம், இரத்த தான முகாம், மரக்கன்றுகள் வழங்குதல், நடுதல், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம் உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும், எழை, எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக எழுத்தியுடன் கொண்டாடடுவது என்றும், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் சுவர் விளம்பரம் செய்திட வேண்டும் என்றும், நாகை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்களில் கலந்து கொள்ள வரும் நவம்பர் 24ம் தேதி நாகை மாவட்டடத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுங்கிலும் சிறப்பான வரவேற்பு வழங்கிடுவது என்றும், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்திடுவது என்றும்.

தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்களின் பணி சிறப்பாக அமைய நாகை மாவட்ட செயற்குழு கூட்டம் வாழ்த்து தெரிவித்தும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

### சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்

# இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் தலைமையில்!

சென்னை, அக்.28-

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து ஆய்வு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் ஆகியோர் நேற்று (26.10.2024) சென்னை, நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகத்தில் (மெட்ரோஸ்) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ஆய்வு செய்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அப்போதைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் பணிகள் தொடங்கப்பட்ட 54.1 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் இரண்டு வழித்தடங்களில் முழுமையாக பயணிகள் சேவை இயக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நாளொன்றிற்கு சராசரியாக 3.1 இலட்சத்திற்கும் மேல் பயணம் செய்து வருகின்றார்கள்.

63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் -II ற்கு ஒன்றிய அரசு பங்களிப்பினை அளிப்பதற்கான ஒப்புதலை தற்போது வழங்கியுள்ளது. சென்னை மாநகரின் பொதுப் போக்குவரத்து கட்டமைப்பில் முதுகெலும்பாக விளங்கும் மெட்ரோ இரயில் போக்குவரத்தின் இரண்டாம் கட்டமும் செயல்பாட்டிற்கு வரும் நிலையில், மொத்தம் 172 கி.மீ மெட்ரோ இரயில் கட்டமைப்பாக இருக்கும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II இன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப்பணிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். சென்னை புறநகர் ஒட்டிய முக்கிய பகுதியான விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டின் இரண்டாம் கட்ட நகரங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செயற்குறிப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்குமாறு ஒன்றிய அமைச்சர் அவர்களை கேட்டு கொள்ளப்பட்டது.

இந்த கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திருமதி. டி. தாரா, சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் டி.அர்ச்சுனன், ராஜேஷ் சதுர்வேதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



செஞ்சியில் சிறு தானிய விழிப்புணர்வு ஊர்தியைசெஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கொடியசைத்து தொடங்கிவைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,வேளாண்மை உதவி இயக்குனர்ச சுஜாதா ஆகியோர் உள்ளனர்.

### செஞ்சி ஒன்றியத்தில்

# ரூ.28.41 இலட்சம் மதிப்பீட்டில்புதிய கட்டடங்கள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

செஞ்சி, அக். 28-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மீனம்பூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறை மற்றும் ஊராட்சி துறை சார்பில் 14.10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பரதன் தாங்கள் ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 14.31லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர் பாஷா, உமாசங்கர் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மீனம்பூர், பரதன் தாங்கள் ஆகிய ஊராட்சிகளில் 28.41லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடங்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,ஒன்றிய கவுன்சிலர் கேமல்,ஒன்றிய அவைத்தலைவர் ஆறுமுகம்,துணை செயலாளர் செல்வமணி,ஒன்றிய பொருளாளர் இக்பால்,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, பள்ளியம்பட்டு தாஜுதீன், குப்புசாமி, லியாகத் அலி,கிளை செயலாளர் பாலு, ஆலம் பூண்டி சேகர்,சிவராமன், அண்ணாமலை,ரமேஷ்,சந்திரசேகரன், வெங்கடேசன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைந்த குழந்தை கள்வளர்ச்சி திட்ட மேற்பார்வையாளர் கலைச்செல்வி, நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.டி. தண்டபாணி
### அக்டோபர் 28 (2001)



கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.


1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை கே.எஸ்.பாண்டியன்
### அக்டோபர் 28 (1952)



கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.

தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

“கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நான் சென்று கொண்டிருப்போம்!” என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட “திராவிட நாடு” தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.

தலைமைக் கழகம்
தி.மு.க.